**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண். 348/2020</u>**

**நாள்– 09.02.2026**

பி.**வா.சா. 1 – <u>திரு.நடராஜன்</u>**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1) எனக்கு அரசியல் கட்சியுடன் தொடர்பு உள்ளதா என்றால் இல்லை. நான் திமுக கட்சியை சார்ந்தவர் என்றும் கடந்த தேர்தலில் திமுக கட்சிக்காக வேலை செய்தேன் என்றால் சரியல்ல. தாவா கோவிலுக்கு கும்பாபிஷேகம் கடைசியாக எந்த ஆண்டு செய்யப்பட்டது என்றால் 2015ம் ஆண்டாகும். 2015ம் ஆண்டிற்கு முன்பு எந்த வருடம் தாவா கோவிலின் கும்பாபிஷேகம் நடைபெற்றது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான், ஞாபகமில்லை. வழக்கின் 9ம் பிரதிவாதி பழனிச்சாமியும், தாசபோயன், கந்தபோயன் ஆகியோர் பங்காளிகள் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் மற்றவர்கள் தாவா சொத்தின் 2வது அயிட்டத்துக்கு வடபுறமாக ஒரு மாரியம்மன் கோவில் அமைத்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2) மேற்படி மாரியம்மன் கோவிலுக்கு ஸ்ரீ விநாயகர் சமுதாய அறக்கட்டளை என்று பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை ஏற்படுத்தி மேற்படி அறக்கட்டளைக்காக 12.09.2021 தேதியில் பத்திர எண்.7777/2022 படி கிரையம் பெற்ற சர்வே எண்.93/21 பட்டா எண்.904 சர்வே எண்.99/19, பட்டா எண்.8272, சர்வே எண்.93/20 பட்டா எண்.9964 நிலத்தில் வாதிகள் மற்றும் சிலர் கட்டி வருகிறார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. தாவா கோவிலில் நிர்வாகம் செய்யும் உரிமை வாதிகளுக்கு பரம்பரையாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா கோவில் நிர்வாகத்தில் நானோ, மற்ற பிரதிவாதிகளோ தலையிட எந்தவிதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தற்போது வரை தாவா கோவில் நிர்வாகத்தினை வாதிகளே செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா கோவிலுக்கு பிரதிவாதிகள் உட்பட அனைத்து பொது மக்களும் வந்து சாமி கும்பிட்டு செல்வதையும், விழாக்களில் கலந்து கொள்வதையும் வாதிகள் எப்போதும் எந்த வகையிலும் வாதிகள் மறுத்ததில்லை என்றால் சரியல்ல.

3) இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகளுக்கும், அந்த ஊரில் இருந்த தொட்டிய நாயக்கர் குடும்பத்தினைச் சேர்ந்த ஒரு குடும்பத்திற்கும் ஏற்பட்ட தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளில் நான் தேவையில்லாமல் தலையிட்டு பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. நான்

ஊர்ப்பிரச்சனையில் தலையிட்டு என்னை பெரிய ஆளாக காண்பித்துக் கொள்வதற்காக என்னுடைய நெருங்கிய உறவினர்களான மற்ற பிரதிவாதிகளையும் தூண்டிவிட்டு தாவா கோவிலில் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 24.02.2015 தேதியிட்ட வட்டாட்சியரிடம் கொடுத்த புகார் மனுவிலும் 27.02.2015 தேதியிட்ட கோட்டாட்சியரிடம் கொடுத்த புகார் மனுவிலும் எந்தவிதமான உண்மைத்தன்மையும் இல்லை என்றால் சரியல்ல. மீண்டும் மீண்டும் கோவில் நிர்வாகத்தில் தலையிட்டு பண்டிகைகள் நடக்கும்போது தேவையற்ற புகார்கள் கொடுத்து கோவில் நிர்வாகத்தினையும் கோவில் செயல்பாடுகளையும் கெடுக்கும் நோக்கத்தில் நடந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

4) கோவிலை முற்றிலும் நடத்தவிடாமல் தடுத்து கோவிலை மூடி விட வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் நான் ஒவ்வொரு வருடமும் கோட்டாட்சியரிடம் பொய் புகார் கொடுத்து வருடா வருடம் கோவில் திருவிழா காலத்தில் பிரச்சனை ஏற்படுகிறது, ஜாதி பிரச்சனை ஏற்படுகிறது என்ற பொய்த் தோற்றத்தினை அரசாங்கத்திடம் உருவாக்கி அதனால் அதிகாரிகளை கோவிலை மூட வைக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் நடந்து வருகிறேன் என்றால் சரியல்ல. கோவில் நிர்வாகத்தில் பல்வேறு இடர்பாடுகளை நான் செய்து வருவதால் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**